**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **SC.No. 2/2010**

Prosecution witness: **51**

| | | | |
|---|---|---|---|
| Name: | பாலகிருஷ்ணன் | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

A2, A4, A6, A8, A11, A12, A15, A17,A20, A23 present. Others absent. Petition U/s 317 filed and allowed.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 25.04.2023**

**முதல் விசாரணை**:

நான் தென்காசி மாவட்டம் சிதம்பரேஸ்வரர் கோவில் தெருவில் வசிக்கிறேன். நான் கூலக்கடை பஜாரில் பாலகிருஷ்ணன் எண்ணெய் கடை என்ற பெயரில் கடை நடத்தி வருகிறேன். சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் குடும்ப பிரச்சனை காரணமாக கடையை திறக்காமல் இருந்தேன். அதன் பின்பு வழக்கம் போல் கடையை திறக்க வரும்போது இரண்டு பிரிவினருக்கு இடையே தகராறு என சொன்னார்கள். குமார் பாண்டி வகையறாவுக்கும் வேறு சிலருக்கும் தகராறு என கேள்விப்பட்டேன். இரண்டு தரப்பிலும் கொலை நடந்ததாக கேள்விப்பட்டேன். இரண்டு பிரிவினர்கள் இஸ்லாமியர் என்றும் இந்துக்கள் என்றும் தெரியவந்தது. ஆஜர் எதிரிகளை நான் பார்த்ததில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார்கள் என்னை விசாரித்தார்கள் என்றும் அவர்கள் விசாரித்தபோது குடும்ப பிரச்சனை காரணமாக அன்று கடையை திறக்கவில்லை என்றும், வழக்கம்போல் நான் கடையை திறக்க வந்தபோது 14.08.2007 ம் தேதி

நடந்த சம்பவத்தில் இரண்டு தரப்பிலும் தலா 3 நபர்கள் இறந்துபோனார்கள் என்றும் சிலருக்கு காயம் ஏற்படடது என்றும் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு நெடுநாட்களாக அதே பகுதியில் கடை நடத்தி வருவதால் எதிரிகளை தெரியும் காயம் பட்டவர்களை தெரியும் என்றும் எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>அனைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.</u>**